செ.வெ.எண் 63 நாள்: 29.08.2019

பெரம்பலூர் மாவட்டம்

**விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

**அதன் விவரம் வருமாறு:**

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே. சாந்தா அவர்கள் தலைமையில் இன்று **(29.08.2019)** நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

பெரம்பலூர் மாவட்டத்தின் வருடாந்திர சராசரி மழையளவு **861** மி.மீ ஆகும். 2019 ஆகஸ்ட் மாதம் வரை பெய்ய வேண்டிய மழையளவு 75.00 மி.மீ, பெய்த மழையளவு 103.73 மி.மீ ஆகும். பயிர் சாகுபடி பரப்பை பொறுத்தவரை தற்சமயம் 8617 எக்டர் பரப்பளவில் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் மற்றும் விதைகள் தேவையான அளவிற்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தோட்டக்கலை துறையின் மூலமாக பண்ணை குட்டை அமைத்தல், நீர் ஆதாரத்தை உருவாக்குதல், நிழல்வலை குடில் அமைத்தல், பசுமை குடில் அமைத்தல், நிலப்போர்வை, குறைந்த செலவிலான வெங்காய சேமிப்பு அமைப்பு, சிப்பம் கட்டும் அறை, தேனீக்களின் மூலம் மகரந்த சேர்க்கை மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சி இயக்க திட்டத்தில் கல் பந்தல், வெங்காய வளர்ச்சி திட்டம் போன்ற பணிகளும் மானாவாரி பரப்பு அபிவிருத்தி திட்டத்தில் தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், மண்புழு உரக்கூடம், பயிற்சி மற்றும் செயல் விளக்கம் போன்ற பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள் கோரிக்கை வைத்த அரசு பொது மருத்துவமனை, மின்சார வாரியம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், பொதுத்துறை வங்கிகள் குறித்த கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிகை எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து வேளாண் பொறியியல் துறை மூலம் உழுவை வாடகை திட்டம், சூரிய ஒளி மூலம் இயங்கும் மோட்டார் அமைத்தல், நீடித்த நிலையான மானாவாரி வேளாண்மைக்கான இயக்கத்தில் நுழைவு முகப்புப் பணிகள், கிராம அளவிலான வாடிக்கையாளர் இயந்திர சேவை மையம் அமைத்தல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், வயல் வரப்பு அமைத்தல், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் மையம் அமைத்தல் பணிகளும் வேளாண்மை இயந்திரமயமாக்கல் உப இயக்கத்தின்கீழ் வட்டார அளவிலான வாடிக்கையாளர் இயந்திர சேவை மையம் அமைத்தல் போன்ற திட்டங்கள் பற்றி விளக்கக் காட்சி மூலம் எடுத்துரைக்கப்பட்டது.

வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில் நுட்ப வல்லுநர் அவர்கள் மக்காச்சோள படைப்புழுவை கட்டுப்படுத்த விதை நேர்த்தி செய்து ஓரக்கால் பயிர்களாக கம்பு, சோளம், சூரிய காந்தி, எள் பயிர்களை பயிரிடவும், படைப்புழுவினால் ஏற்படும் பாதிப்பும் மற்றும் அதனை கட்டுப்படுத்த கோடை உழவு, இனக்கவர்ச்சி பொறி, விளக்கு பொறி மற்றும் பூச்சிகொல்லி மருந்துகள் மூலம் கட்டுப்படுத்தும் முறையை பற்றி விவசாயிகளுக்கு விரிவான முறையில் விளக்கம் அளித்தார்.

இக்கூட்டத்தில் விவசாயிகள் பேசுகையில் பெரம்பலூர் மாவட்டத்தில் படைப்புழுவினால் பாதிக்கப்பட்டுள்ள மக்காச்சோள பயிர்களுக்கு நிவாரணம் அனைத்து விவசாயிகளுக்கும் முழுமையாக வழங்க வேண்டுமெனவும், எறையூர் சர்க்கரை ஆலை மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய பாக்கி தொகையினை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்கவும், பெரம்பலூர் மாவட்டத்தில் குடிநீர் பிரச்சனைக்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர். கூட்டுறவு கடன் சங்கத்தில் அனைத்து விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர்.

இக்கூட்டத்திற்கு திரு.ராஜேந்திரன் மாவட்ட வருவாய் அலுவலர், திரு.கணேசன், வேளாண்மை இணை இயக்குநர், திரு.ப.செல்வக்குமரன் கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர், திரு.நாகரத்தினம் திட்ட இயக்குநர்(பொ), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திரு.சு.ராஜசேகரன், வேளாண்மை துணை இயக்குநர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வே)(பொ) மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**பெறுதல்:** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.